[28 March 1969

(இ) இவ்வாறு வன்முறைச் செயல்களில் ஈடுபடும் நாரைக்கிணறு கிராமத்திலுள்ள மறவர்கள், குற்றவியல் தண்டனைச் சட்டக் கோவையின் 110 (e), (f) பாதுகாப்புப் பிரிவுகளின்கீழ் நடவடிக்கை எடுக்கப்படு கின்றனர் என்றும் முறையான காவலர் பாதுகாப்பும் ரோந்தும் நாரைக் கிணறு நிலையத்தில் ஏற்பாடு செய்யப்பட்டன என்றும், நாரைக்கிணறு புறக்காவல் நிலையத்திலுள்ள காவலர்கள் மிகவும் விழிப்புடன் இருக்கும் படி அறிவுறுத்தப்பட்டனர் என்றும் காவல்துறை கண்காணிப்பாளர் அறி வித்துள்ளதாகத் திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் கூறியுள்ளார். முக்கியமாக நள்ளிரவில் திடீர்ச் சோதனை நடத்தும்படி காவல்துறை கண் காணிப்பாளருக்குத் தாம் அறிவித்திருப்பதாகவும், இப்பகுதியில் பயணச் சீட்டு இல்லாமல் பயணம் செய்வதைத் தடுக்க ஏற்புடைய நடவடிக்கை எடுக்கும்படி திருச்சிராப்பள்ளி ரயில்வே காவல் துறைக் கண்காணிப் பாளருக்குத் தாம் அறிவித்திருப்பதாகவும் மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

Untouchability.

* 273 *Q.*—THIRU R. KRISHNASWAMY NAIDU (on behalf of THIRU N. R. THIAGARAJAN) : Will the Hon. the Minister for Health and Harijan Welfare be pleased to state—

(*a*) whether untouchability is observed in the Church of Suranam adjacent to Ilayankudi ; and

(*b*) whether anybody is observing fast opposing the untouchability ?

தீண்டாமை.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : (திரு. என். ஆர். தியாகராஜன் சார்பில்) : *மாண்புமிகு சுகாதார அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—*

(அ) இளையான்குடியை அடுத்த சூராணம் மாதா கோவிலில் தீண் டாமை அனுஷ்டிக்கப்படுகிறதா ?

(இ) இதை எதிர்த்து உண்ணாவிரதம் நடக்கிறதா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : *(அ) இல்லை.*

(இ) மாதாகோயிலின் சுற்றுப்புறச் சுவரையடுத்த திறந்தவெளியில் 8—11—68 முதற்கொண்டு 10—11—68 வரை தீண்டாமையை எதிர்த்து உண்ணா நோன்பு மேற்கொள்ளப்பட்டது. ஆனால் சூராணம் மாதா கோயிலில் செயலில் இருந்த நடைமுறையை எதிர்ப்பதற்கு இந்த உண்ணா நோன்பு மேற்கொள்ளப்படவில்லை.

Loans given to Washermen and Barbers.

* 274 *Q.*—THIRU M. AYYASWAMY : Will the Hon. the Minister for Health and Harijan Welfare be pleased to state—

(*a*) whether an order has been issued with reference to the answer given by the Hon. Chief Minister to the question No. 225, on 8th March 1968 that the loans given to the Washermen and Barbers 5 or 6 years ago for the purchase of their implements and tools will be written off ;

(*b*) if so, whether a copy of the order will be placed on the Table of the House ;

28th March 1969]

(c) if not, the reasons therefor ; and

(d) whether the Government are aware of the fact that even after the assurance given by the Chief Minister, the officials are collecting the dues in a harassing manner?

சலவையாளர், சவரத் தொழிலாளர்களுக்கு அளித்த கடன் வசூல்.

திரு. எம். அய்யாசாமி : மாண்புமிகு சுகாதார-அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 8—3—1968 அன்று 225-ம் எண் கேள்விக்கு விடையளிக்கையில் 5, 6 வருடங்களுக்கு முன்பு சலவையாளர், சவரத் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட தொழில் கருவிகளுக்கான கடனை வசூலிக்காது தள்ளுபடி செய்யப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறியபடி உத்திரவு பிறப்பிக்கப்பட்டு விட்டதா ?

(இ) ஆம் எனில், உத்திரவின் நகல் ஒன்று மேஜையின் மேல் வைக்கப்படுமா ?

(உ) இல்லையெனில், காரணம் என்ன ?

(எ) இவ்வாறு முதலமைச்சர் உறுதி கொடுத்த தேதிக்குப் பின்பும் கூட பாக்கித் தொகைகளை கெடுபிடி செய்து அதிகாரிகள் வசூல் செய்திருப்பதை அரசு அறியுமா ?

மாண்புமிகு (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) ஆம்.

(இ) அவசியம் இல்லை என்று கருதப்படுகிறது.

(உ) இக்கேள்விக்கு இடமில்லை.

(எ) உத்திரவு பிறப்பித்தபின் பாக்கித் தொகைகளை வசூலிப்பதாகக் குறிப்புகள் ஏதுமில்லை.

திரு. எம். அய்யாசாமி : மதுரை மாவட்டம் பெரியகுளம் வட்டத்திலும் நெல்லை மாவட்டத்திலும் இருந்து எனக்கு ஏராளமான கடிதங்கள் வந்திருக்கின்றன. அந்த உத்தரவுகளைப் பத்திரிகையில் வெளியிட்ட பிறகும் கூட ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள், கிராம அதிகாரிகளைப் பார்த்தபோது எங்களுக்கு அந்த உத்தரவு வந்து சேரவில்லை என்று பொருள்களை வசூல் செய்கிறார்கள். இதைப்பற்றி அமைச்சர் அவர்கள் விசாரிப்பார்களா ?

மாண்புமிகு (திருமதி) சத்தியவாணிமுத்து : பல இடங்களில் அவைகளை ரத்து செய்யாமல் இருந்திருக்கலாம். மாவட்ட நல அதிகாரிகள் மிகக் கவனமாக இருந்து வருகிறார்கள். புகார் கூறுகிறவர்கள் மாவட்ட நல அதிகாரிகளை சந்தித்தோ கடிதம் மூலம் தெரிவித்தோ இருந்தால் வசூலிக்க வேண்டுமென்று கெடுபிடி செய்யாமல் இருக்கச் செய்வார்கள் அதை மீறி வசூல் செய்கிறார்கள் என்றால், அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டுவந்தால், அரசாங்கம் முன் சென்று அத் தொகைகளை வசூலிக்காமல் செய்வார்கள்.

திரு. எம். அய்யாசாமி : கடன் ரத்து செய்யப்பட்டது என்ற விஷயத்தில் குழப்பமான சூழ்நிலை உருவாகியிருக்கிறது. அதாவது மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் சவரத் தொழிலாளர்களுக்கும், சலவைத் தொழிலாளர்களுக்கும் வழங்கப்பட்ட கடன் ரூ. 6 லட்சம் வரையில் ரத்து செய்யப்பட்டது என்று சில இடங்களில் பேசியதாக பத்திரிகையில் வந்ததன் பயனாக கூட்டுறவு ஸ்தாபனத்தின் மூலமாகப் பல ஆயிரக் கணக்கான ரூபாய் கடனாகப் பெற்றவர்கள் எல்லாம் அமைச்சர் ரத்து செய்துவிட்டார் என்றும் அதைக் கொடுக்கமாட்டோம் என்றும் பல இடங்களில் கொடுக்காமல் இருக்கிறார்கள். சேலம் மாவட்டத்திலிருந்து

அமைச்சரைக் காண்பதற்கு வந்திருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் அந்தக் கடனை ரத்து செய்தாகிவிட்டதா என்ற விவரத்தைத் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு (திருமதி) சத்தியவாணிமுத்து ; ஏற்கனவே 1960–61-ல் மருததுவர்களுக்கும், சலவைத் தொழிலாளர்களுக்கும் கடன் தொகை அளித்து அவர்கள் தொழில் முன்னேற்ற கருவிகள் போன்றவை வாங்குவதற்காக கடன் தொகை அளிக்கப்பட்டது. சலூன் வைத்திருப்பவர்களுக்கு ரூ. 250 என்றும் லாண்டரி நடத்துகிறவர்களுக்கு ரூ. 150 என்றும் டெய்லரிங்குக்கு ரூ. 400 என்றும் 1960–61-ல் அளிப்பதாக முடிவெடுத்து தரப்பட்டிருந்தது. பிறகு 1961–62-ல் அது ரூ. 50-ஆகக் குறைக்கப்பட்டது. குறைக்கப்பட்ட தொகை 1963–64, 1964–65, 1965–66 ஆகிய ஆண்டுகளில் கொடுக்கப்பட்டது. 1965–66-க்குப் பிறகு கடனைக் கொடுக்க முடியாது என்று நிறுத்தப்பட்டது. நிறுத்தப்பட்ட தொகையை அவர்கள் கடனைப் பெற்றிருக்கிறார்கள் என்றும் அதை 1966-க்குப் பிறகு வசூலிக்க முடிவு செய்திருக்கிறது. கடனை வசூலிக்கும்போது கொடுக்க முடியவில்லை என்று தொழிலாளர்கள் கூறியிருக்கிறார்கள். அதைத்தான் இந்த மன்றத்தில் 1968-ம் ஆண்டு மார்ச் மாதம் இதுபோன்று வரவு-செலவு மானியவிவாதம் நடைபெறும்போது உறுப்பினர் கேட்டார். மறைந்த முதலமைச்சர் அவர்கள் அந்தக் கடனை ரத்து செய்துவிடுகிறேன் என்றும் அதை மானியமாக ஏற்றுக் கொள்வதற்கு உறுதியளிக்கிறேன் என்றும் சொன்னார்கள். அதன் படியே ஜி.ஓ. 2986 என்ற ஆணை 9—10—1968-ல் அதற்குரியவகையில் பிறப்பிக்கப்பட்டது. அதைக் கடைப்பிடித்து மற்ற அதிகாரிகள் செயல்படவேண்டும். அதில் தாமதம் இருந்திருக்கலாம். பல இடங்களில் செய்துவிட்டார்கள். தாமதமிருந்து அதைத் தெரிவித்தால் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : கடன் அளிப்பதற்கு அரசாங்கம் நேரடியாகக் கருவிகளை இலவசமாக வழங்கினார்களா ? வாங்குவதற்குக் கடன் வழங்கினார்களா ? சில பெரிய நகரங்களில் அதிகமாகத் தொழில் செய்கிற இடங்களில் அவர்களாகவே கூட்டுறவுக் கடன் சங்கங்களை அமைத்துக்கொண்டு அவர்களாகவே கடன் கொடுத்து வாங்கலாம் என்று சங்கங்களைப் பதிவு செய்திருக்கிறார்கள். அங்கத்தினர்களுடைய கேள்வியானது, கூட்டுறவு சங்கங்களுக்கு விதிவிலக்கு உண்டா என்பது. அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட அரசாங்க உத்தரவில் கூட்டுறவு சங்கங்கள் சேர்ந்திருக்கின்றனவா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இந்த அரசாங்கம்தொழிலாளர்களுக்குக் கொடுத்த கடனை வசூலிப்பதற்குத் தான் விலக்களித்தது. கூட்டுறவு சங்கங்களுக்குக் கொடுக்கவில்லை. அதில் வாங்கியவர்களுக்காக அரசாங்கம் எதையும் ஏற்றுக்கொள்ளவில்லை.

திரு. எம். அய்யாசாமி : கூட்டுறவு இலாகாவின் மூலமாக சர்க்காரே கடன் பல மாவட்டங்களில் வழங்கியிருக்கிறது. அதையும் சர்க்கார் கடன் என்று பொதுவாகவே மதிப்பிடுகிறார்கள். கூட்டுறவுக் கடனைக் கட்டாயம் செலுத்தத்தான் வேண்டுமென்று தெளிவாக அறிக்கை விடுவார்களா ?

மாண்புமிகு (திருமதி) சத்தியவாணிமுத்து : கூட்டுறவில் கடன் தருவது தாழ்ந்த இனத்தை சேர்ந்தவர்கள் என்ற முறையில் அல்ல. பொருளாதார நிலையில் தாழ்ந்த எவருக்கும் தரும் கடனாக இருக்கும். தொழில் கருவிகள் வாங்குவதற்காக கொடுக்கப்பட்ட கடன்தான் இது. அரிசன நல இலாகா மூலம் தரப்பட்ட கடன். அதைத்தான் அரசாங்கம் மானியமாக ஏற்றுக்கொள்கிறது.